அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 19/2014

எனது இல: 75/10/CC /2007(3) *II*
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07,
2014.07. 09

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்ட செயலாளர்கள் அனைவருக்கும்.

**இலங்கை வெளிநாட்டுத் தூதுக்குழுக்களில் சேவையாற்றுவதற்கு இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் மாற்றுச் சேவை நியமனம்**

இலங்கை வெளிநாட்டுத் தூதுக்குழுக்களில் சேவையாற்றுவதற்கு மாற்றுச் சேவை நியமனத்திற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரியாக விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராக இருக்க இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள்,

I. பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டதாரியொருவராக இருத்தல்.
II. சேவையில் ஆறு ஆண்டுகளைப் பூர்த்திசெய்திருப்பதுடன்
    அ) உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்
    ஆ) இயைபுடையவாறு உரிய திகதியன்று முதலாம், இரண்டாம் வினைத் திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்
III. விண்ணப்பப்பத்திரம் கோரப்படும் கடைசி திகதிக்கு 45 வயதுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்
IV. விண்ணப்பப்பத்திரம் கோரப்படும் கடைசி திகதிக்கு முன்னைய 5 ஆண்டுகள் உரிய திகதி மீதான சகல வேதனப் படியேற்றங்களையும் உழைத்துப்பெற்றிருத்தல்.
V. எந்தவித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படாதிருத்தல்.
VI. ஆங்கில மொழி/ வெளிநாட்டு மொழிகளில் நல்லறிவினைக் கொண்டிருத்தல்.
VII. கணினி அறிவினைக் கொண்டிருத்தல்.

தெரிவு நேர்முகப் பரீட்சையின் செயலாற்றுகை மீது இருத்தல் வேண்டும்.

பொருத்தமான பரீட்சார்த்திகள் பின்னிணைப்பு 01 இற்கு இணங்கத் தயாரிக்கப்பட்ட அவர்களுடைய விண்ணப்பங்கள் மற்றும் கோர்வையில் உரிய அத்தாட்சிப்படுத்திய பின்னிணைப்புக்களுடன் 2014, ஆவணி மாதம் 11 ஆம் திகதிக்கு முன்பு செயலாளர் (இலங்கை நிர்வாக சேவைக் கிளை, இணைந்த சேவைகள் பிரிவு) அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07. இற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

ஒப்பம் / பீ. வீ. அபேகோன்
செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.